நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 12
தொகுதி: 112
திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்
விலை: ரூ.20
திசம்பர் - 2018

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி
கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் — 4

2. சிலப்பதிகாரப் புதையல்கள் - கண்ணகியாரும் செல்லத்தம்மனும் — 5
   - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. நூற்றெட்டுத் திருப்பதி வண்ண விருத்தம் — 9
   - பேராசிரியர் பெ.சுயம்பு
   சென்ற இதழின் தொடர்ச்சி

4. பிரான்சில் திருக்குறளின் செல்வாக்கு — 17
   - பேராசிரியர் ப.மருதநாயகம்
   சென்ற இதழின் தொடர்ச்சி

5. வள்ளல் பாண்டித்துரைத் தேவர் உ.வே.சாமிநாதையரவர்களுக்கு எழுதிய கடிதங்கள் — 24
   - பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி
   சென்ற இதழின் தொடர்ச்சி

6. சங்க இலக்கியத்தில் வேங்கைப்புலி, வேழம், வேங்கைமரம் — 28
   - பேராசிரியர் கஸ்தூரி இராமசாமி
   சென்ற இதழின் தொடர்ச்சி

7. சைவ சித்தாந்தமும் திருமந்திரமும் — 38
   - முனைவர் உ.கருப்பத்தேவன்
   சென்ற இதழின் தொடர்ச்சி

8. சங்கச் செய்திகள் — 42

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.இளங்குமரனார் கண்ணகி புகழ் உடம்பு எய்திய மாட்சி மதுரைமாநகரில் போற்றப்படும் சிறப்புக்குறித்து எடுத்துரைக்கிறார். புகழ் உடம்பு எய்தினாருக்கு கற்கோயில் எடுத்து வழிபடும் வழக்கம் பன்னெடும் காலமாக இருந்து வருகிறது. கண்ணகி காலில் அணியும் சிலம்பு கைக்கு வந்து நீதிகேட்டு நின்ற நிலை மதுரையில் நிகழ்ந்தது. கண்டவர் உள்ளம் பதைக்கக் கண்ணகிக்கு உற்ற அவலம் மதுரையை உலுக்கியது. வேந்தனும் அவன் துணைவியும் கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லை என உயிர் துறந்தனர். அடைக்கலம் பெற்ற ஆயர்பாடி மக்கள் சொல்லொன்னாத்துயரம் உற்றனர். அவர்கள் கண்முன் சிலம்பொடு நின்ற துயரக்காட்சி கோயிலாயிற்று. அக்கோயில் இன்றும் செல்லத்தம்மன் கோயிலாகச் சிறப்புற்று விளங்குகிறது.

ஆனால் சிம்மக்கல் தான் திசை தவறிவிட்டது. தமிழ்மக்கள் பலநூறு ஆண்டுகளாகத் திசை தவறிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். கண்ணகிக்குரிய சிம்மவாகனம் அவளுடைய பார்வையில் இல்லாமல் இடைக்காலத்தில் வேறு திசையில் சென்று கொண்டிருக்கிறது. கண்ணகியை நோக்கி இருக்க வேண்டிய சிம்மம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. இது நாட்டின் அவலம்; மக்கள் திசை தப்பிய பயணம்; இவை சிந்திக்க வேண்டியவை.

அடுத்துப் பேராசிரியர் ப.மருதநாயகம், பேராசிரியர் பெ.சுயம்பு, பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் கசுத்தூரி இராமசாமி, முனைவர் உ.கருப்பத்தேவன் ஆகியோர் நவம்பர் திங்களில் எழுதி வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி இந்த இதழிலும் தொடர்கின்றது. கட்டுரைகள் குறித்து ஏற்கனவே குறிப்புரை எழுதியுள்ளதால் மீண்டும் அது குறித்து எழுதுவது மிகையாகும் என்பதால் அவற்றை மீண்டும் எழுதவேண்டியதில்லை என நினைக்கிறேன்.

சிலம்புப் புதையல்

1 கண்ணகியாரும் செல்லத்தம்மனும்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

மதுரை மாநகரின் வடக்கு வெளிவீதியில் 'சிம்மக்கல்' என்பதோர் இடம். அவ்விடத்தில் 'சிம்மக்கல்லுரு' உள்ளது. முன்பு அது, தென்பால் நோக்கியிருந்து, இதுகால் கீழ்பால் திருப்பி வைக்கப்பட்டுள்ளது.

தென்பால் திரும்பியிருந்தகாலை அதன் முன் பார்வையில் இருந்த திருக்கோயில், செல்லத்தம்மன் கோயில்; இப்பொழுது பின்பார்வையில் அமைந்துவிட்டது.

செல்லத்தம்மன் கோயில் வடக்குப் பார்த்தது. பழமைச் சின்னமுடையது. அங்கே 'கண்ணகி' என்னும் பெயர் எழுதி வைக்கப்பட்ட கல்லுரு உள்ளது. அதனை அடுத்து, 'இடைச்சியம்மன்' உள்ளது.

செல்லத்தம்மன் கோயில், 'கண்ணகி கோயில்' என்பது ஊர் சொல்லும் செய்தி! உண்மைச் செய்தியா? சான்று உண்டா? இளங்கோவடிகள் வாக்கே அகச்சான்று!

'சிலம்பின் வென்ற சேயிழை' கண்ணகியார்! கண்ணகி என்று சொல்லப்படும்; சிலையில் சிலம்பு உண்டா? 'ஆம்' கண்ணில் காட்சி எழில் கவினி நிற்கக் கண்ணகியார் கையில் தனிச்சிலம்பு உள்ளது!

"செம்பொற் சிலம்பொன்று கையேந்தி" (19, 23)

"காவியுகு நீரும் கையில் தனிச்சிலம்பும்" (20:வெண்பா 2)

"கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்" (20: வெண்பா 2)

"இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்" (20;27):

"பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்" (20:42)

என்று அடிகளார் கூறும் சிலம்பு, அம்மையார் கையகத் துண்மை கண்ணகம் நிறைகின்றது. இது பிறிதின் கிழமைச் சான்று. மற்றொன்று;

கண்ணகியார் காது, வீழ் காது! வடிந்து வீழ் காது; கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காது; மும்மடி அடையால் நம்மடிகளார், கண்ணகியார் காதெழிலை வடித்துக் காட்டுகிறார். வடிதல் - தொங்குதல்! வீழ்தல் - தட்டி வழிதல்; நீர் வீழ்ச்சியால், 'வீழ்' அறியலாமே! ஆலம்

வீழ்து அறியாதததா? வளைந்து திரண்ட காதணிகளைத் துறந்தும் கூட வடிந்து வீழும் காது! ஆம்! அடிகள் உணர்வை அப்படியே வாங்கிக்கொண்டு, அவர் திருவடிப் பொடியைச் சூடிய கலைவல்லான் அடிகள் சொல்லை, அப்படியே கல்லில் வடித்திருக்கிறான்! வடிந்துவீழ் காதைப் பார்க்க வேண்டுமா? "வாருங்கள் மதுரைச் செல்லத்தம்மன் கோயிலுக்கு" என்று சொல்லாமல் சொல்லி அழைக்கின்றான்;

கண்ணகியார் பக்கத்தே இருக்கும் 'இடைச்சியம்மன்' எவர்? உணர்ந்த மக்கள் எவ்வளவு உணர்வோடு போற்றுகிறார்கள் என்பதற்கு 'இடைச்சியம்மைப்' பெயரே சான்று!

கண்ணகிக்கு அடைக்கலம் தந்தவர் எவர்?

"கோவலர்' குடியில் வந்த மாதரியம்மை! அவரோ

தீதிலள்; முதுமகள்; செவ்வியள்; அளியள்"

எனப் பண்பியல் பட்டங்களைப் பாரிக்கப் பெற்றவர்!

பண்பியல் பட்டங்களைத் திட்டமிட்டுத் தீர்மானித்துத் தந்தவரோ, முடிகெழு வேந்தன் உடன்பிறந்தும், நாடு நகர் துறந்தாலும் நற்றமிழ் துறவாத் தூய துறவி இளங்கோவடிகளார்! அதனை, வழங்குகின்ற அருமையாட்டியோ, மறந்தும் புறந்தொழா அருகசமயத் தவமுதாட்டி கவுந்தியடிகள்! நேரில் வழங்கினால் நாணத்தால் பெற மறுப்பார் 'மாதரியார்' என்று நெஞ்சத்தால் வழங்குகின்றார்! அடைக்கலமாகக் கண்ணகியையும் வழங்குகின்றார்! எப்படி?

"இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்" *(15:130)*

அடைக்கலம் பெற்றவர் நிலை என்ன ஆயிற்று? கொடுமை கொடுமை!

"அடைக்கலம் இழந்தேன் இடைக்குலமக்காள்"

என்று கரைந்துருகி,

"இடையிருள் யாமத்து எரியகம் புகுந்தார்" *(27:77-8)*

இடைச்சியம்மையை இவரென இன்னும் விளக்க வேண்டுமா?

கோவலனைத் தம் மகனாகக் கருதினார் கோவலர் குடி மூதாட்டி மாதரி. தன் மகள் ஐயையைக் கண்ணகியார்க்கு 'நாத்துணை' யாகத் தந்தார்! அடியார்க்கு நல்லார், "நாத்தூண் நங்கைக்கு' விளக்கம் வரைகின்றார். "நங்கை என்று புதல்வர் மனைவியைக் கூறும் முறைப் பெயராதலின் நங்கை என்றாள் என்க" என்றும், "கோவலனைத் தனக்கு மகனாகக் கருதி இங்ஙனம் கூறினாள்" என்றும் கூறுகிறார் (16:14:19).

"ஆய்ச்சியர் குரவைக்கு அடித்தளமானவர் மாதரி; கண்ணகி காண, கண்ணன் ஆயர்பாடியில் பிஞ்ஞை (நப்பின்னை)யோடு ஆடிய குரவையை ஆடி விளைந்த தீக்குறியைப் போக்க முனைகின்றார். ஆயர் குடி வழிபாடு மாயோன் வழி போக்க முனைகின்றார். ஆயர் குடி வழிபாடு மாயோன் வழிபாடே! "மாயோன் மேய காடுறை உலகம்" ஆய்ச்சியர் குரவைக்கும் முல்லைப் பாணிக்கும் முறைமையுடையவே அல்லவோ;

பின்னே குரவையாடும் மாதரி, முன்னே தம் இல்லில் கோவலன் உண்ண, கண்ணகி படைக்கும் காட்சியை எப்படிக் காணுகிறார்?

"ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ!
நல்லமு துண்ணும் நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுநை ஆற்றுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லோ"

எனக் காண்கிறார். மகனாகவும் மருகியாகவும் கண்ட மாதரியார், கண்ணனாகவும், பின்னையாகவும் கருதி விம்மிதம் அடைகிறார்! வழிபடு தெய்வமே விருந்து வந்ததாகக் களி துளும்பி 'ஐயையும் தவ்வையும் விம்மிதம்' எய்துகிறார்கள்; "கண் கொளா நமக்கிவர் காட்சி" என்கிறார்கள். மாதரியார் காட்சி இவ்வளவில் நிற்க!

பதிகம், கண்ணகியாரை எப்படி அறிமுகப்படுத்துகிறது? 'திருமா பத்தினி' என்கிறது (5). மங்கல வாழ்த்து, 'போதிலார் திருவினாளாகக்' காட்டுகிறது (25) மனையறம் படுத்ததோ, குழவித் திங்களுக்கும், மூவாமருந்துக்கும் உடன் பிறப்பாகக் கூறுகின்றது. "இவளைத் திருமகளாக்கி அமிர்தின்முன் கூறப்பட்டது" என்றும், "இங்ஙனங் கூறினார் பிறை திருவொடு பாற்கடலிடைப் பிறத்தலின் இவளைத் திருமகளாக மதித்து" என்றும் முறையே அருஞ்சொல் உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் உரைத்தனர்.

வேட்டுவச் சாலினியோ, "ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி" (12: 49-50) என்றும், மாடலனோ, "திருத்தகு மாமணிக் கொழுந்து" (15, 93) என்றும் கண்ணகியைத் திருக்காட்சி காண்கின்றனர். மாடலன் கோவலனைக் 'கோபாலன்' என்றே விளிக்கின்றான். (15;93).

கோவலன் பிரிந்த புகார், இராமன் பிரிந்த அயோத்தியாகின்றது (13, 65-6). "தாதை ஏவலின் மாதுடன் போகிக் காதலி நீங்கக் கடுந்துயர் உழந்த" இராமனே எடுத்துக்காட்டாக நிற்கின்றான் (14, 46-7).

இவையெல்லாம் சுட்டுவதென்ன? கண்ணகி திருமகள் போல்வாராய்ப் பிறர்க்குக் காட்சி வழங்க, மாதரியார்க்கும் ஆயர் குடியார்க்கும் திருமகளாகவே காட்சி வழங்கினாராம். ஆதலால் இடைச்சியம்மைக்கும் அடைக்கலம் தந்த ஆயர் குடியார்க்கும் செல்வத் தம்மையாகக் கண்ணகியார் திகழ்ந்தாராம். 'செல்வத்தம்மை' திருமகளல்லரோ?

'செல்வத் தம்மை, செல்லத்தம்மை யாகுமா? செல்வம் கொடுத்தல்' 'செல்லங் கொடுத்தலாக' வில்லையா? 'செல்வம்' என்பாரைச் 'செல்லம்' என வழங்குவதில்லையா? செல்லாயி, செல்லப்பன், செல்லம்மை! செல்லாண்டி, செல்லியம்மை இவையெல்லாம் வழக்கில் இல்லாதவையா?

இடைச்சியம்மையும் அவர் வழியினரும் செல்வத்தம்மையாகக் கண்ணகியாரைக் கண்டு வழிபட்ட 'சொற்கோயில்' சிலம்பு என்றால், 'கற்கோயில்' 'செல்லத்தம்மன் கோயில்!' அக்கோயிலை அடுத்திருப்பவை இராமாயணச்சாவடி; பெருமாள் கோயில்; ஆயர் பெருமக்கள் குடியிருப்பு. இத்தொடர்புகள் இயல்பாய் அமைந்திருக்கவும் முடிவு செய்யவோர் இடரும் உண்டோ?

தமிழ்ச்சங்கம்

மூன்றுபெரு சங்கங்கள் முன்னாளில் மூவேந்தர்
தாம்நிறுவி அவையழிய; தமிழ்மக்கள்
ஊன்உண்ண, உடைஉடுக்க உரிமைபோற்ற
உண்மைக்கே வழியின்றி அடிமையாக
வான்மக்கள் சிலர்நல்ல செயல்பேண வழிகாட்ட
நூலின்றிக் கலக்கியதால் சங்கங்காண
தான்வந்து சங்கம்போல் பலர்கூட்டி மலரை - நாடும்
தேனென்னப் புலவர்களைக் கூட்டினார் நம் தேவதேவர்!

புலவர்.திருமிகு சி.அரசப்பனார்

நூற்றெட்டுத் திருப்பதி வண்ண விருத்தம்

பேராசிரியர் **பெ.சுயம்பு,**
மேனாள் பேராசிரியர்,
ஆதித்தனார் கல்லூரி,
திருச்செந்தூர்.
கைபேசி : 9486379688

சென்ற இதழின் தொடர்ச்சி

கலக விழிமகளிர் காம மோகன
முலையில் மருவியுயிர் வாட வோசில
கரும மிகுபிறவி வீழ வோவுன - தடியாரோ
டிலகு மிருசரண நாடி யேயனு
தினமு முறைமுறை பராவ வோவரு
மியல்பு மிகுகருணை யேது தானென - வறியேனே
உலகு தொழுகுருகை மாறர் பாடிய
பொருளி னிசைகவரு ஞான பூடண
வொளிகொள் மலர்மகளை மேவு பூரண - நெடுமாலே
அலகில் மணிமறுகில் மேடை மேலினி
துறையு மரிவையர்கள் பாட லோதையோ
டரிய மறைகள்மிகு கூட லூர்வரு - பெருமானே (34)

இஃது ஒரு கவிக்கூற்றுப்பாடல். ஆடுதுறைப் பெருமாள் கோயில் எனப்படுகிற கூடலூர் இறைவன் வையம் காத்த பெருமாளை (ஜெகத்ரட்சகன்) நோக்கிக் கவிஞர் இவ்வாறு பாடுகிறார்.

கனவு தந்த காதல்

இவ்வண்ண விருத்தத்தின் உரிப்பொருள் களவுக் காதல். ஒரு நாள் இரவில் துயிலும்போது தலைவி கனவு ஒன்று காண்கிறாள். வையம் அளந்த நெடுமாமால் ஆகிய பெருமாள் எனும் தலைவன் தலைவியிடம் தாமே வந்து, அவளை ஆர அரவணைத்துக் கலவி இன்பம் அளிக்கிறான். அவ்வின்பத்தால் தன்னை இழந்த தலைவி அவனையே மணாளனாக்கிக் கொண்டு, காதல் மயக்கம் கொண்டு - காதல் நோயால் துயர் உறுகிறாள். கனவு தந்த காதலை நனவிற்கும் உரியதாக எண்ணி ஆழ்ந்த நம்பிக்கை கொள்கிறாள். எனவே நாள்தோறும் அவர் வந்து தழுவி இன்பம் தர வேண்டும் என்பது அவளது வேணவா. அவர் வந்து தழுவிடாத நாட்களில்

அவளைக் காமன் மலரம்புகள் துளைக்கின்றன. இரவு நீடி இன்னல் தருகிறது. தென்றல் வந்து நெஞ்சைத் துளைக்கிறது. ஈன்ற தாயும் அயலாரும் அலர் தூற்றித் துன்புறுத்துகின்றனர்.

இணர்மொய்த்த குழல்சோர முச்சந்தி வேர்வைமே
வரவத்தி ரவிழிகாதி லெதிர்வந்து பாயவே
யிருகுத்து முலையானை முதுகின்க ணேறவே - யிதமாயோர்
அணைமெத்தை தடுமாற விடைநைந்து வாடநீள்
மணிமுத்த வடமாட மருவிந்திர போகமா
மதிசித்தி ரநயலீலை தருமின்ப நாளுநான் - மறவேனே (29)

பெருமாள் தந்த இன்பம் இந்திர உலகத்துத் தெய்வீக இன்பமாயிற்று தலைவிக்கு. சிற்றின்பம் ஆன்மாவும் பரமான்மாவும் ஒன்றெனும் நிலையாகிய பேரின்பம் ஆயிற்று. சொப்பன நிலையினை விழிப்பு நிலை (ஜாக்கிரதை) ஆக்குகிறார் கவிஞர்.

பஞ்சணையி லென்னையித மாக வேயிரு
செங்கையுற வண்ணமுலை மீது மேவிய
பண்புமவ ரின்னகையு மூழி காலமு - மறவேனே. (30)

கடிம லர்மெத்தையின் மிசையேயரி
பிளவு தவித்தய வுடனேயிசை
கலவி விளைத்தொரு மயிலேயென - விரகாலே
மடியி லிருத்திய பொழுதேதன
துடையை நெகிழ்த்திரு முலைமேலெனை
மருவி யணைத்தெழு சுகலீலையை - மறவேனே. (37)

சீவதரி யாச்சி ரமத்தெந்தை மாமுகி - லணைமீதே
ஏறியிரு பேர்க்கு மனத்தன்பு கூர்தர
வாசமுலை மேற்ற ழுவித்துங்க வாயமு
தேபருகி நாட்ட முறக்கொஞ்சி மேவின - ரினிவாரார்
தூறுசொல வாக்கு மடுத்தின்று போயினர்
ஆசைவெகு வாச்சு தினிச்சென்று தானொரு
தூதுவிடு லேச்சு மிகத்துன்று மேயிது - விதிதானே (125)

சிற்றின்ப விளையாட்டுத் திறத்தைச் சிறப்பாகக் கவிஞர் விவரிக்கிறார்.

இன்று மடிந்துயி ரிறப்பேனது
மண்ட லமெங்குமோ ரளப்பாய்விடு
மென்ப ழிகண்டவர் வரத்தாமத - நினைவாரேல்
நின்ற பெருங்கரி யழைத்தோர்பல
நந்த வனஞ்செறி திருப்பேர்தனில்
நெஞ்சு துணிந்தினி நடப்போமெழில் - மடமானே

காதல் நோயின் கொடுமை மடல் ஏறுதற்குத் தலைவியைத் தூண்டுகிறது. இங்குக் கவிஞர் மகளிர் மடல் ஏறுதல் இல்லை எனும் தமிழ் மரபை விடுத்து, வடமொழி மரபைப் பேணுகிறார். திருமங்கை மன்னனின் நெறியும் இதுவே.

கருத்துற்ற தொண்டரை யாளு மச்சுதர்
தமைக்கிட்டி யிங்கித மாக மெய்ப்பொடு
களிப்புற்ற ணைந்திடு மாறு புத்திசொல் - மடமானே (46)

மடமானே! அச்சுதர் தம்மை மனத்து அமைத்துக் கொண்ட பக்தரை ஏற்றுப் பரமபதமாம் பேரின்பநிலையைத் தருகிற பேரருளாளர். ஆனால் என்பால் பாராமுகமாக ஏனோ இருக்கிறார். எனவே அவரை அணைந்து, வந்து என்னை ஆட்கொள்ளுமாறு அறிவுரை கூறுக என்கிறாள் தலைவி.

பெருமாளாகிய தலைவர் வாரார் எனின், அவரது திருப்பவளச் செவ்வாய்க் கனியமுதைப் பருகி இன்புறுகிற பாஞ்சசன்னியச் சங்கினை வாங்கி வருக; அன்றேல் அணிந்துள்ள துழாய்மாலையினையாவது பெற்று வாருங்கள் என்று உரிமையுடன் தூதுவிடுகிறாள். தோழியரை - மானை - நாரையைத் தலைவி தூது அனுப்பிடத் தயங்கினாள் இல்லை.

செழித்த வன்பார்க் கிதத்த சேறையில் - நீரேபோய்
மறித்து நின்றித் தினத்தி லேயவர்
பறித்த சங்கைத் தரச்சொல் வீரது
மறுக்கி லின்பத் திருத்து ழாய்கொடு - வாராயே (21)

சீதேவியும் பூதேவியும் அறியாதவாறு தனிமையில் இருக்கையில் அவரிடம் சென்று என் துயரநிலையை எடுத்துரையுங்கள் என்று சொன்ன தலைவி, இன்றேல் அவர் திருவீதியுலா வரும் வேளையில் அவரை இடை

மறித்து, சங்கினையோ துழாய்மாலையினையோ பெற்று வருக என்கிறாள். இரு தேவியரும் அறியின் சிக்கல் உருவாகிவிடுமன்றோ!

சங்கோ மாலையோ கிடைக்கப்பெறாத தலைவி, காதல்நோயால் படுத்த படுக்கை ஆயினள்.

சுற்றியோடி வளைத்தது தென்றனெ
ருப்பைவாரி யிறைத்தது வெண்பிறை
துட்டவேள்க ணைதைத்துநி றைந்தது - பழிபாராள்

பெற்றநீலி யிருக்கு மிடந்தழல்
பற்றிவேம தொருத்தர றிந்திலர்
பித்தர்போல விரக்கினு மென்குறை - யறியாளே
சற்றுமூணு முறக்கமு மின்றியி
ளைத்துவாடி மனத்தினி னொந்தவ
சத்திலாவி யிறக்குமு னிங்கித - மடவீர்காள்
பற்றலாக வெடுத்து விரைந்தொரு
கட்டின்மீது கிடத்தியெ னன்புறு
பத்தராவி திருக்கண மங்கையில் - விடுவீரே (36)

தன்னை ஒரு கட்டிலில் கிடத்தித் தூக்கிக்கொண்டு போய்த் திருக்கண்ணமங்கைப் பெருமாளிடம் விடுமாறு தலைவி வேண்டுகிறாள். முற்றிலும் நாணுத் துறந்த நிலை.

சொல் வளம்

இவ்விலக்கியம் உணர்ச்சியைக் கற்போருக்கும் கேட்போருக்கும் தரவல்ல பழகு தமிழ்ச் சொற்களையும் தொடர்களையும் நிரம்பப் பெற்றுளது. இச்சொல்லாட்சி கதைத்தலைவியின் துயர உணர்ச்சிகளைத் துய்ப்போரிடம் சிறப்பாகக் கொண்டு சேர்க்கிறது.

தொல்காப்பியம், இலக்கண விளக்கம் போன்ற நூல்கள் தமிழ்மொழி அமைப்பினை ஆதாரமாகக் கொண்டு இலக்கணம் கூறுகின்றன. எனினும் அவை திசைச்சொல், வடசொல் எனப் பேச்சுவழக்குகள், பிற மொழிகளிலிருந்து பழகு தமிழில் வழங்கும் சொற்களையும் ஏற்றுக் கொண்டுள்ளன. உணர்ச்சிமிகு உயிரோட்டத்திற்கு இவை மிகவும் இன்றியமையாதன. வழக்கில் பயின்று

வருதலால் பொருட்புலப்பாடும் எளிதில் முழுமையாக அமையும். உணர்ச்சி மிகுந்த புலம்பல் இலக்கியங்கள் அல்லது அக இலக்கியங்களுக்கு இவை முதன்மையானவை. வண்ணவிருத்தம் தலைவியின் புலம்பலாகவே பாடல்களைக் கொண்டுளது.

அண்டர், ஆக்கை, இடங்கர், உடலம், எவ்வுள், ஒக்கல், ஓதிமம், ஓதை, செய்யமங்கை, செய்யவள், திருமாது என்பன போன்ற செஞ்சொற்கள் பல இதில் உள்ளன. அஞ்சு, அய்ய, அசடு, அசடன், அண்டைக்கு, ஆர், ஆச்சு, ஆனை, கசடன், கணா (கணா எனும் வெப்ப நோய்), கள்ளி (கள்வி), கிடக்கு, கொந்து, கொலைகாரி, சண்டைக்காரியள் (சண்டைக்காரிகள்), கோட்டி, சம்பி, சமத்து, சன்னை, சர்க்கரை, சீனி, சிண்டுமுடிதல், சொக்க, தங்கம், தொந்தம் ஆடுவள் (சண்டைஇடுவள்), பம்பி, பம்பி, பய்ய, புறுபுறுப்பள் (முணுமுணுப்பள்), பெலம், பெலவான், மட்டு, மென்றுபோடும், மோந்து, வம்புகள், வம்பி, விலைமுறி, னாள் (நாள்) போல்வன பேச்சு வழக்கில் பேரளவில் பயில்வன.

அயல்மொழிச் சொற்களும் பலவும் பேச்சு வழக்கில் உள்ளனவே. அதிசெயம் (அதிசயம்), அதிரூபர், அபிமானம், அரிகரி, அனுதினம், அவதூறு, ஆக்கினை, ஆணை, ஆரம், இக்கு, இங்கிதம், இச்சை, இட்டம், இதம், இந்து, ஈனம், லங்கை, இலங்கை, உத்தமன், உபயம், உபாயம், ஊகம், கிட்டினர், கிருட்டினர், சத்துரு, சம்போகம், சறுவேசர் (சர்வேசர்), சனகி (சானகி), சீக்கிரம், சுரம், செகதலம், சென்மம், செனனம், சேட்டை, சொன்னம் (சொர்ணம்), சோகம், சோதி, துட்டன், பிரதாபகுணங்கள், பிரியம், பாதிராத்திரி, மலசலகும்பி, மனத்தாபம், மாலிகை, மானுசகபடம், விடம், ராட்சதர், லட்சி (லட்சுமி), வார்த்தை, வாலப்பிராயம் என்பன இந்நூலில் காணப்படும் அயல்மொழிச் சொற்களுள் சில.

நடப்பியல், யாப்பமைதியை மையப்படுத்திச் சொற்கள் சிதைத்தும் ஏற்கப்பெற்றுள்ளன. அஞ்சம் (அன்னம்), அனை (அன்னை), சனகி (சானகி), சோதை (யசோதை), லட்சி (இலட்சுமி), மேர் (மேரு), வைய்து (வைது) போல்வன அத்தகையன.

தொய்யி லெழுங்கதி ரார மாமுலை
புல்லி மகிழ்ந்திரு பேரும் வாய்மொழி

சொல்லியிணங்கிடும் வாறு நேர்கிலர் - மடவார்தான்
வைய்து வளைந்தன ராசை யோர்கிலர்
செய்வ துமொன்றிலை யாரை நோவது
வல்வி னையின்றெனை மேவி னாலென் - செய்குவேனே

தொய்யி - வைய்து, யகரத்திற்கு ஐகாரம் எதுகையாக வருதல் ஏற்கப்பெற்றதே. எனினும் 'வைய்து' என்று உணர்ச்சி மிகுதிக்காக எழுதப்பெற்றது எனலாம். அன்றேல் 'ஐ' என்பதனை 'ஐய்' என்று எழுதுகிறவர்களின் தாக்கமாகவும் கொள்ளலாம்.

கதைக் குறிப்புக்கள்

இதிகாச புராணப் பாகவத நிகழ்வுகள் பல பெருமாளின் பெருமைகளாகப் பேசப்பட்டுள்ளன. இராமபிரான் இராவணனைக் கொன்று வீடணாழ்வாருக்கு அரசுரிமை வழங்கியது, கசேந்திரன் எனும் யானையைக் காத்தது, பாரதக் கதைநிகழ்வுகள் ஆகியன பரவலாக மீண்டும் மீண்டும் வருகின்றன. இவற்றுள் சரணாகதித் தத்துவம் அடங்கி இருத்தலே காரணம்.

பொருப்பி ணங்கிய புயத்தி ராவணன்
முடிக்கு லங்களை யறுத்து வீடணர்
புரக்க லங்கையை யளித்த வார்சிலை - நெடுமாமால் (75)

இஃது இராமாயணக் கதைக் கரு.

புனக்க டக்கரி சொன்ன விரைத்துழாய் - நெடுமாமால் (1)
நின்ற பெருங்கரி யழைத்தோர் (17)

இவை கசேந்திரனுக்கு நற்கதி வழங்கிய கதைகள்.

புனைசங்கைக் கனிவா யூதிப் பலபோர் - பொரு
படைமங்கப் பகலே யாதித்தன் மேலிருள்
பொருசெம் பொற்கதிர் சேராழிக்கை மாயவர் (98)

இது கண்ணபிரான் சக்கரத்தால் சூரியனை மறைத்து இருளாக்கி, சிந்து மன்னன் அழிவுக்கு வழி வகுத்தது.

பாரதப் படைதூண்டு முனேயொரு
நாடளித் திடவேண்டி முனேகிய
பாடகத் துறைபாண்டவர் தூதர் (99)

கண்ணபிரான் பாரதப்போருக்கு முன்னே சமாதானத் தூதனாகிக் கௌரவரிடம் சென்ற கதை.

வெண்ணெய் கவர்ந்தொரு மத்தி னாலடி - படுமாமால் (25)
வடிதயிர் பாற்குடத் தள்ளி யுண்டனை
கயிறொடு சேர்த்திடைத் துய்ய வஞ்சியர்
வசையொடு தாக்கிடப் பய்ய நின்றழு - முரவோனே (131)

பணிமுடி பொடியாமுறை தோதிமி
தரிகிட திவீதோவென வாடிய
பரிபுர மலரார் (26)

இவை குழந்தைக் கண்ணனின் திருவிளையாடல்கள். இவை போன்ற கதைக்குறிப்புக்கள் பலவற்றை ஆசிரியர் பயன்படுத்தி, இலக்கியத்தைச் செழுமையாக்கியுள்ளார்.

தலபுராணக் குறிப்பு ஒன்றும் இந்நூலில் இடம்பெற்றுளது. திருவள்ளூர்த் திருத்தலம் பற்றியது அது.

செய்யவள் கொங்கையில் மேவ வேயொரு
தள்ள விழுங்கிழ வோனு மாயிருள்
செல்ல நினைந்திடு போதி லேதவ - முனிதானே
அய்யவெ ழுந்தருள் வீரெ னாமுன
மெவ்வு ளெனும்படி பேசி யேமெல
அவ்வு ளுறங்கிய வீர ராகவர் (111)

சாலிகோத்திர முனிவரிடம் பெருமாள் கிழவராக வந்து படுத்திட இடம் கேட்க, முனிவரும் தம் குடிசையைக் காட்ட, அதனைச் சுட்டி எவ்வுள் (எவ்விடம்) என்று கிழவராக வந்த பெருமாளும் வினவினார். அவ்வினாவே அத்திருப்பதிக்கு எவ்வுள் எனும் பெயராயிற்று. இத்திருப்பதி இந்நாளில் திருவள்ளூர் எனப்படுகிறது.

திருப்பதி விவரிப்பு

திருப்பதிகளின் விவரிப்பு அங்குள்ள பெருமாளின் பெருமைகள், ஊரின் நீர்வளம் எனும் அளவில் இணைந்து காணப்படுகிறது. இவ்விவரிப்பு முந்தைய இலக்கியங்களில் காணப்படுகிற மரபினைத் தழுவியது.

வண்டிசை பாடு மலர்த்தவி சோதிம
மன்றுயில் வாவி பெருத்தழ கேபொலி
வண்பரி சாரநகர்க் கரசனவர் (80)

செழித்த தண்புனல் வாவி வாளைகள்
கழித்திருங் கரு மேதி யோடிகல்
திருப்பு ளிங்குடி யூரிலே (72)
மலர்விரி தடத்தந்து வாளைகள்
கமுகெழு குலைச்சிந்த மோதிய
வளமலி தலைச்சங்க நாண்மதி (22)

இவை ஊரின் நீர்வளம் பற்றியவற்றுள் சில.

அணிமேடை துன்னியழ கெழுந்து பொற்கதிர்
வெயில்வீசி மன்னுதெரு வளங்கள் மொய்த்திய
லரிமேய விண்ணகர முறைந்த வச்சுதர் (42)

பொன்னின் கதிர்மணி மேடையி
லன்னந் துயிலெழ வேயிசை
பொம்மென் றளிமுரல் சோலையி - னிழலூடே
மன்னுங் குடைவளை மேவிய
கண்ணங் குடிவரு மாயவர் (35)

இவை செல்வவளம் மிகுந்தவை பெருமாள் உறையும் திருப்பதிகள் எனற்குச் சான்றுகள் சில.

நூற்றெட்டுத் திருப்பதி வண்ணவிருத்தம் தமிழ்ச் சிற்றிலக்கிய மரபுகளைச் செழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட இலக்கியம். நாயக நாயகி பாவனைப்பட்ட பக்தி இலக்கியம். சரணாகதி எனும் வைணவத் தத்துவம் குறிப்பாகப் புலப்படுவது. வைணவத் தத்துவம் குறிப்புக்கள் வெளிப்படையாக இல்லை. அதுவே இந்நூலை மகிழ்வுடன் துய்த்தற்கு ஒரு காரணியாகவும் அமைகிறது. இக்கட்டுரை இந்நூலின் சிறப்புக்கள் சிலவற்றை எடுத்துத் தெளித்துள்ளதே அன்றி, ஆய்வுரை அன்று. ஆனால் பிற்கால ஆய்விற்கான தூண்டுதலாக அமையின் சிறப்பு.

பிரான்சில் திருக்குறளின் செல்வாக்கு

பேராசிரியர் **ப.மருதநாயகம்,**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 113.
கைபேசி: 94427 87727

சென்ற இதழின் தொடர்ச்சி

திருவள்ளுவரைப் பற்றி வழங்கிவந்த கதைகளையெல்லாம் ஆய்வுக்குறிப்புகளுடன் தொகுத்துச் சொல்லும் குரோ அக்கதைகளில் அம் மாபெரும் அறிஞர் எவ்வாறு பல தொழில் செய்வாரோடும், பல இனத்தாரோடும் இணைக்கப்பட்டார் என்பதை நகையுணர்வோடு எடுத்துக்காட்டுவார்.

> What is recounted of the weaver of Mylapore, on the contrary, ties together the intercaste network that roots the **Tirukkural** in the indigenous non - Brahmin community, of farmers through his adoptive parents and his wife, of artisans through his chosen profession and of merchants through the caste of his protector and the supplier of his thread, friend Elelasimha who promptly became his most devoted disciple. (ப.131)

(திருவள்ளுவரைப் பற்றிய கதைகள் அவரைத் தமிழகத்தில் வாழ்ந்த பிராமணர் அல்லாத பிற சாதியாரோடு உறவுபடுத்திப் பின்னப்பட்டுள்ளன: அவர் மைலாப்பூரில் நெசவுத்தொழில் செய்தவர்; அவரை வளர்த்த பெற்றோரும் மனைவியும் உழுதொழில் மேற்கொண்டவர்; அவரைக் காத்த வள்ளல் ஏலேலசிம்மர் வணிகர்.)

திருவள்ளுவரைத் திருமூலர், போகர், இடைக்காடர் போன்ற சித்தர்களோடு தொடர்புறுத்தும் கதையையும், அவரது உடன்பிறந்தவளாகிய அவ்வையாரோடும், இடைக்காடரோடும் அவர் மதுரை நகருக்குச் சென்று சங்கப்புலவர்களோடு வாதிட்டுச் சங்கப் பலகையில் திருக்குறளுக்கு இடம்பெற்ற கதையையும், அப்புலவர்களால் இயற்றப்பட்ட **திருவள்ளுவமாலை** தோற்றம் பெற்ற கதையையும் சொல்லிச்செல்லும் குரோ திருவள்ளுவரைப் பல சமயத்தாரும் எம்சமயத்தவர், எம்சமயத்தவர் என்று வாதிட்ட வரலாற்றையும்

தம்முடைய ஐயங்களோடும், வினாக்களோடும் விளக்கங்களோடும் குறிப்பிடுகிறார். திருவள்ளுவர், கிறித்துவத் துறவியான தாமசு முனிவரின் சொற்பொழிவைக் கேட்டிருக்க வேண்டுமென்றும், ஏசுவின் மலைச்சொற்பொழிவின் தாக்கம் திருக்குறளில் இருக்கிறதென்றும் கூறுவார்க்கு விடையாக, குரோ மைலாப்பூரிலுள்ள சாந்தோம் ஆலயத்தில் அதற்கான தடயம் ஏதும் இல்லையென்றும் வள்ளுவரைக் கிறித்துவசமயத்தோடு மட்டுமல்லாமல் சைவ, வைணவ, புத்த, சமண சமயங்களில் எதனோடும் முற்றுமாக அடையாளப் படுத்த முடியாதென்றும் உண்மையை உரைப்பார்.

> He was not therefore to be catholic, except in the etymological sense of "Universal" and the Hindus are able to go on featuring him, in disputes with the Buddha dharma or the Jain faith... Most of the other arguments being about as decisive, it is evidently better to give back Tiruvalluvar to universal wisdom, especially because it was what he himself wanted.

(திருவள்ளுவரின் வாழ்க்கைநோக்கு உலகு தழுவியது; எந்தவொரு சமயத்திற்கும் கட்டுப்பட்டதன்று.)

வைணவரும், சமணரும், பௌத்தரும் "தாமரைக் கண்ணான் உலகு" என்னும் தொடரில் வரும் தெய்வம் திருமாலே, இந்திரனே, அருகனே, புத்தனே என்றெல்லாம் வாதிடுவதையும் குரோ கேள்விக்குரிய தாக்குவார். 'தாமரைக் கண்ணான்' என்றும் 'கமலச் செங்கண்' உடையவன் என்றும் திருமால் வைணவர்களாலே போற்றப்படுகிறார். 'கண்' என்பது இடம் என்னும் பொருளையும் தருவதாலே, ஒரு சமயம் தாமரையில் ஒளிந்திருந்த இந்திரனையும் அத்தொடர் குறிக்கலாம்; தாமரைமேல் அமர்ந்திருப்பவனாகப் பேசப்படும் பிரமனையும் சுட்டலாம்; சைனர்களின் தெய்வமான அருகன் தாமரை மலர்மேல் தன் பாதங்களை வைத்திருப்பவனாக வருணிக்கப்படுதலால், அவனும் அத்தொடர்க்கு உரியவனாகலாம். பௌத்தர்களும் தாமரையோடு உறவு கொண்டாடுபவர்களே! இவ்விளக்கங்களைத் தரும் குரோ,

> Moreover, in this choice between three Hindu paradises, the god of the Jains, his feet resting on a lotus flower, cannot be disqualified, nor can the claim of the Buddhists, who possess the lotus of the law. (ப.133)

என்று அத்தொடரை அடிப்படையாக வைத்து வள்ளுவரின் சமயத்தை உறுதிசெய்தல் தவறென்பார்.

இக்கட்டுரையின் இப்பகுதியில் குரோ ஓர் அடிக்குறிப்பில் தரும் செய்தி ஆழமான ஆய்வுக்குரியது. வாலென்டின் (Francois Valentijn) என்பார் 1724-26இல் பதிப்பித்த **Description of Ceylon** என்னும் நூலில் சில பழம்தமிழ் இலக்கியங்களின் பட்டியல் ஒன்றைத் தருகிறார். அப்பட்டியலில் இடம்பெறும் **திருக்குறள்** பற்றி அவர்,

> "One of their best prayer books, composed in clear and concise verses by Tiruvalluver. Those who can read and understand him can understand the most difficult poets. This writer, according to the writings of Seneca, lived over 1500 years ago at Mailapore or San Thome" **(Description of Ceylon,** translated and edited by Sinnapah Arasaratnam. The Haklyut Society, London, 1978, Intr. P.51)

என்று விளக்கும்போது, செனகா எனும் ரோமானியத் தத்துவ அறிஞர் திருவள்ளுவரை 1500 ஆண்டுகளுக்கு முன் மைலாப்பூரிலோ, சாந்தோமிலோ வாழ்ந்தவர் என்று தமது நூலில் குறிப்பிட்டிருப்பதாகச் சொல்கிறார். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள செனகாவின் கட்டுரைகளிலிருந்து இக்குறிப்பு எங்கு வருகிறதென்று கண்டுபிடிக்க இயலவில்லையாயினும் செனகாவின் கட்டுரைகளை ஆழ்ந்து படிப்பார் அவற்றில் திருக்குறளின் ஆழமான தாக்கம் இருப்பதை அறியலாம். செனகா கி.மு.முதல் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் கி.பி.முதல் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் வாழ்ந்தவர்.

III

காமத்துப்பாலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கு எழுதியுள்ள நீண்ட முன்னுரையிலும், காமத்துப்பாலுக்கு உரை வரைந்த இடைக்கால உரையாசிரியர்கள் பற்றி எழுதியுள்ள ஆய்வுக்கட்டுரையிலும் காமத்துப்பால் பற்றி குரோ தரும் விளக்கங்கள் சில சிறப்பானவை.

அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் கவிஞர் தம்முடைய கருத்துக்களைத் தாமே கூறுகிறார்; காமத்துப்பாலோ நாடக வடிவில் அமைந்துள்ளது. ஒவ்வொரு குறளும் ஒருபாத்திரம் இன்னொரு பாத்திரத்திடமோ, பலவற்றிடமோ, தனிமையிலோ பேசுவதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. சில குறள்களில் இருவர் தமக்குள் ஒருவரோடு ஒருவர் பேசும் உரையாடலையும் காணலாம். இருபத்து நான்காம்

அதிகாரப் பாடல்கள் இத்தகையவை. காதலனும் காதலியும் அல்லது கணவனும் மனைவியும் என்று இரண்டு பாத்திரங்கள் அடையாளப்படுத்தப்பெறுகிறார்கள். சில குறள்களில் தலைவி தோழியிடம் பேசுவதும் நிகழ்கிறது.

ஓர் உரைமரபு காமத்துப்பாலின் இருபத்தைந்து அதிகாரங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கிறது. முதல் ஏழு அதிகாரங்களில் பேசுவது தலைவன்; அடுத்து வரும் பன்னிரண்டு அதிகாரங்களில் பேசுவது தலைவி; இறுதி ஆறு அதிகாரங்களில் இருவரும் பேசுகின்றனர். இப்பாகுபாட்டைத் **திருவள்ளுவமாலையில்** உள்ள மோசிகீரனார் பாடலிலும், காளிங்கரின் உரையிலும், தஞ்சையில் கிடைத்த ஆசிரியர் பெயர் தெரியாத ஒரு பாடலிலும் காணலாம். குரோ இப்பாகுபாட்டில் இருக்கும் குறைகளை வெளிப்படுத்துகிறார். முதல்நான்கு அதிகாரங்களில் பேசுவது தலைவன் என்றும் ஏழுமுதல் பத்தொன்பது வரையிலான அதிகாரங்களில் பேசுவது பெரும்பாலும் தலைவியென்றும் ஏற்றுக் கொள்ளலாமாயினும் மற்றைய அதிகாரங்களில் உள்ள குறள்களுக்கு இப்பாகுபாடு பொருந்தவில்லை. ஏழாம் அதிகாரத்தில் யார்குரல் ஒலிக்கிறது என்பதை உறுதியாகச் சொல்ல இயலாது.

பரிமேலழகர், முதல் ஏழு அதிகாரங்களைக் களவு என்றும் பதின்மூன்று முதல் இருபத்தைந்து வரை உள்ள அதிகாரங்களைக் கற்பு என்றும் பகுப்பார். பரிப்பெருமாளும் மணக்குடவரும் காமத்துப்பாலை மூன்று பகுதிகளாகப் பிரித்து விளக்கம் தரக் காணலாம். 1) முதல்மூன்று அதிகாரங்களில் தலைவனும் தலைவியும் புணர்ச்சியால் விளையும் இன்பத்தைத் துய்த்தல் 2) நான்கு முதல் இருபத்தொரு அதிகாரங்கள் வரை, பிரிவிற்குப்பின் கூட்டம்பற்றி எண்ணி இரங்கல் 3) இருபத்தியிரண்டு முதல் இருபத்தியைந்து வரை, ஊடலுக்குப் பின் நிகழும் கூட்டத்தால் பெறும் இன்ப நுகர்ச்சி.

மணக்குடவர் தமது உரையில் 25 அதிகாரங்களையும் ஐந்தைந்தாகப் பிரித்து ஐந்திணைகளின் உரிப்பொருள்களோடு இணைத்துப் பேசுவார்.

1) குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும் - புணர்ச்சி - முதல் ஐந்து அதிகாரங்கள்.

2) பாலை - தனிநிலம் இல்லை - பிரிவு - ஆறுமுதல் பத்து வரையிலான ஐந்து அதிகாரங்கள்.

3) முல்லை - காடும் காடு சார்ந்த இடமும் - இருத்தல் - மாலை - முல்லைநிலத்துக் குழல் (பதினைந்தாம் அதிகாரம் எட்டாம் குறள்), பதினொன்று முதல் பதினைந்து வரையிலான ஐந்து அதிகாரங்கள்.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை (1228)

4) நெய்தல் - கடல்சார்ந்த இடம் - இரங்கல் - உடல்நலிதல் (பதினாறாம் அதிகாரம்) - பிரிந்த தலைவனை எண்ணி ஏங்கி அன்பை வெளிப்படுத்தல் (பத்தொன்பதாம் அதிகாரம்) - பதினாறு முதல் இருபது வரையிலான ஐந்து அதிகாரங்கள்.

5) மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும் - ஊடல் - இருபத்தொன்றுமுதல் இருபத்தைந்து வரையிலான ஐந்து அதிகாரங்கள்.

காமத்துப்பாலைக் களவு, கற்பு என்று இரு பகுதிகளாகப் பிரிக்காமல், ஐந்திணை அடிப்படையில் ஐந்து பகுதிகளாகப் பிரித்தமைக்கான காரணங்களைப் பிரெஞ்சுக்கல்வியாளர் எடுத்துரைப்பது அறிந்து இன்புறத்தக்கது.

1) சங்க அக இலக்கியத்தை எண்ணும்போது, முதலில் நம் அறிவிற்குத் தோன்றுவது ஐந்திணைப்பாகுபாடே.

2) சங்க அக இலக்கியங்களில் எல்லாம் பெரும்பாலும் காணப்படுவது ஐந்திணைப் பாகுபாடே.

3) திருக்குறளின் காமத்துப் பாலையும் இவ்வாறு பிரிப்பது *பரிமேலழகருக்கு முன்னிருந்த பழமையான மரபு* என்பதற்கான தடயங்கள் கிடைக்கின்றன.

திருவள்ளுவர் ஐந்திணை மரபைப் புறக்கணிக்காது, அதன் இன்றியமையாக் கூறினுக்குச் சிறப்புரிமை அளித்து, வட்டார அடையாளங்களையெல்லாம் பிரபஞ்சப் படிமங்களாக மாற்றும் சாதனையை வெற்றியோடு நிகழ்த்தியுள்ளார் என்பது குரோவின் தெளிவான முடிவும் பாராட்டுமாகும்.

Our Personal feeling is that Tiruvalluvar, Who overlooked none of the poetic conventions of the "interior landscape", deliverately condensed them through an extraordinary economy of means: the diversity of themes is reduced, variations concentrate upon the essential and, in a kind of stylization of the second degree, the regional emblems inherited from the cankam take on the value here of universal archetypes. (ப.143)

வேறெங்கும் காணப்படாத, தமிழ் அக இலக்கிய மரபிற்கே உரியதான மடலேறுதலைக் காமத்துப் பாலின் ஆறாம் அதிகாரத்தில் வள்ளுவர் பயன்படுத்திக் கொண்டுள்ள சிறப்பையும் குரோ விளக்குவார். தலைவன் மடலேறுதலைப் பற்றிப் பேசுவதெல்லாம் அவன் கொண்ட காதல் மிகுதியாலும், தலைவியைத் திருமணம் செய்து கொண்டு ஊராரின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற விழைவாலுமேயாகும். மடலேறுதலின் கொடுமையைக் கருத்தில் கொண்டு, தலைவனைக் கண்டித்தல் முறையாகாது.

We shall content ourselves noting that the kuṟaḷ which is absolutely not interested in the gratuitous picturesque, has devoted to this episode, not at all widespread in the early literature, a place that might be judged immoderate if not properly understood as the ultimate expression of the excessiveness of love. Tiruvaḷḷuvar has retained and immortalized the extraordinary force of the symbol. (p.147)

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி. *(1131)*

நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன் இன்று உடையேன்
காமுற்றார் ஏறும் மடல். *(1133)*

சங்க அக இலக்கிய மரபில் பரத்தைக்கு அளிக்கப்பட்டிருந்த இடத்தைத் திருவள்ளுவர் காமத்துப்பாலில் தராமையையும் குரோ சிறப்பித்துப் பேசுவார். ஒரு குறளில் தலைவனே பரத்தன் என்று அழைக்கப்படுகிறான்: "பொண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர் நண்ணேன் பரத்த நின் மார்பு."

காமம் பற்றிய பிராகிருத, வடமொழி நூல்களோடு சங்க அக இலக்கியங்களையும் திருக்குறள் காமத்துப்பாலையும் ஒப்பிடும் குரோ, திருக்குறளின் தனித்தன்மையையும் அக இலக்கியமரபின் தொன்மையையும் சுட்டிக்காட்டுவார். வடமொழியிலுள்ள காம நூல்களின் விரசமான, ஆபாசமான கூறுகளையும், கீழ்த்தரமான உத்திகளையும் வள்ளுவர் முற்றுமாக விலக்கியிருப்பது பாராட்டப்படுகிறது.

There is no serial pedantry here, nor any exhausting sequences of physical types and postures or assorted bites and scratches, and no

adornment, unguents or potions ; and there is nothin either about the reversed posture which seems to have fascinated Indian erotic authors. It is necessary to remember these in order to appreciate the extraordinary economy of expression of the Book of Love only a brief mention of saliva (V, 1) or the sweat of the brow (XXV, 8), in contrast to the games of chewing betel and of merry sexual frolics complacently described elsewhere. The naked body of the Tamil heroine is never to be seen, anymore than was that of Draupati. For Tiruvalluvar the image of one drunk on palm wine is but a comparison with that of one drunk on the love born of sight and thought (I, 10; XIII, 1; XXI 1), as in Laconfession anonyme by syzanne Lilar: "For the first time, I gave its true name to the drunkenness lovers communicate to one another throught their eyes alone". (p.150)

(காமுகர்களின் விரசமான விளையாட்டுகளுக்கு இங்கு இடமில்லை; கடித்தல்கள்; நகக்கீறல்கள், வசியமருந்துகள், காமத்தைத் தூண்டும் அணிகள், உடலுறவுக்குத் துணைசெய்யும் பொருள்கள் ஆகியவை முற்றுமாக ஒதுக்கப்படுகின்றன. வடநூலார் விரும்பிப்பேசும் மாற்றுநிலைகள் (ஆண் உடலின் மேல் பெண் உடல்) புறக்கணிக்கப் படுகின்றன. திருவள்ளுவரின் காமத்துப்பாலின் சொற்சுருக்கத்தின் சிறப்பறிய இவற்றையெல்லாம் நினைவில் கொள்ளவேண்டும். வடமொழிக் காமநூல்களில் காணப்படும் வெற்றிலை மெல்லுதல், பிற பாலுறவுக்காட்சிகள் ஏதும் இங்கில்லை. வாயில் ஊறும் எச்சில் பற்றி ஒரு குறளும், நெற்றிவியர்வை பற்றி ஒரு குறளும் சுருக்கமாகச் சுட்டுகின்றன.

பாலொடு தேன் கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறியநீர் *(1121)*

ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. *(1328)*

தலைவியின் ஆடையற்ற உடலை எங்கும் காண முடியாது. ஒருவனும் ஒருத்தியும் பார்வையாலும் எண்ணத்தாலும் கொள்ளும் காதலின்பத்தைத் திருவள்ளுவர்,

ஒருவன் கள்ளருந்திப்பெறும் இன்பத்தோடு ஒப்பிடுவார்:

தொடர்ச்சி அடுத்த இதழில்

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் உ.வே.சாமிநாதையரவர்களுக்கு எழுதிய கடிதங்கள்

பேராசிரியர் **இ.சுந்தரமூர்த்தி,**
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
16, பாரதி தெரு,
திருமலை நகர் விரிவு, பெருங்குடி,
சென்னை - 600 096.

சென்ற இதழின் தொடர்ச்சி

உ

திருச்சிற்றம்பலம்

ம.ள.ள.ஸ்ரீ வே.சாமிநாதையர் அவர்களுக்கு,

ஐயா,

நிகழநின்ற பிலவ (வருடம்) வைகாசி மீ யக - உ (11) யாகிய 1901 மே மீ 24 தீ முதல் மதுரையில் ஓர் தமிழ்ச்சங்கம் செந்தமிழபிவிர்த்தியின் பொருட்டு நடத்த நிச்சயிக்கப் பெற்றுள்ளது. இதன் கருத்தினை உடன் வரும் பத்திரிகை வாயிலாய் நன்றறியலாகும். தமிழபிமானிகளாகிய தாங்கள் இச்சங்கத்தின் தமிழ்வித்வத்வ அங்கத்தின் ஒருவராகவிருந்து தமிழ்ப் பாஷாபாவிர்த்திக்காய உதவிகளைப் புரிந்து ஆதரித்து வருதற்குத் தங்கள் சம்மதித்தையளிக்க மிக்க தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ்ச்சங்கம் — இங்ஙனம்
மதுரை — பாண்டித்துரை
02.01.01 — அக்குராசனாதிபதி

மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவிக்கும் கருத்திலமைந்த கூட்ட அமைப்பு மடல் என்பது இதனால் புலனாகும்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு வேண்டிய அச்சியத்திரம் 1902ஆம் ஆண்டில் வாங்கப்பட்டுள்ளது. அதனை ஐயரவர்களுக்குத் தெரிவித்துத் தொடங்கவிருக்கும் தமிழ் மாதாந்திரப் பத்திரிகைக்குக் கட்டுரை வேண்டி 29.08.1902 அன்று ஒரு மடல் விடுக்கின்றார் பாண்டித்துரைத் தேவர்.

உ

திருச்சிற்றம்பலம்

ஐயா,

நமது மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு வேண்டிய அச்சியந்திரங்கள் வாங்கியமைக்கப் பெற்று சுபகிருது வருஷம் ஆவணி மீ நாளது 1902 செப்டம்பர் 15 யாகிய சுபதினத்தில் வேலை தொடங்குவதாகக் கடவுளின்றிருவருளைப் பிரார்த்தித்து நிச்சயித்திருக்கின்றது.

நம் சங்கத்தினின்றும் **செந்தமிழ்** என்னும் பெயரிய ஓர் மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை வெளிப்படுத்தலாகுமென முன்னரே யறிவித்துள்ளபடி வெளியிடற்கு அப்பத்திரிகைக்குத் தாங்களருமையிற் கற்றகல்வியினாய விஷய சாதனங்கள் இன்றியமையாச் சிறப்புடைய வாதலிற் றங்கனுண்ணறிவிற்கு எட்டிய வரும் பெரும் விஷயங்கள் யாவும் நம் செந்தமிழ்ப் பத்திரிகை தன்னிடங்கொண்டு இத்தமிழுலகு மிக்க நன்மை புரியுமாறு செய்விக்கத் தங்களை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

பாண்டித்துரை

29.08.02

அக்கிராசனாதிபதி

மதுரைத் தமிழ்ச்சங்கம்

தமிழாராய்ச்சிக்கு அரிய தொண்டாற்றிவரும் ‘செந்தமிழ்’ இதழின் தோற்றம் பற்றிய வரலாறு இக்கடிதத்தால் புலனாகின்றது.

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் தாம் எழுதும் நூல்களில் காணலாகும் ஐயங்களை சாமிநாதையருக்கு எழுதித் தெளிவு பெற்றதை மற்றொரு மடல் காட்டுகின்றது. நம்பியகப்பொருள் நூலில் உள்ள மேற்கோள் செய்யுள் குறித்த விளக்கங்களைக் கேட்டுத் தெளிவு பெறுகின்றார். ‘நம்பியார் அகப்பொருள்’ எனக் குறிப்பது எண்ணத்தக்கது.

6.6.1907 அன்று எழுதிய அம்மடல் வருமாறு:

ப்ரம்மஸ்ரீ ஐயரவர்கட்கு அநேக நமஸ்கார பூர்வமாகச் செய்யும் விக்ஞாபனம் க்ஷேமம். அவண் க்ஷேமாதிசயங்களை அறிய வேணவாவுடையேன்.

யான் இங்குள்ள நம்பியார் அகப்பொருட் பிரதிகளை வைத்து ஆராய்ந்து மூலத்தையும் அதன் பழைய உரையையும் சோதித்து முடித்திருக்கிறேன். அவ்வுரையில் இடையிடையே வரும் மேற்கோள்களில் இடம் விளங்காதவைகளை ஒருங்கு திரட்டி எழுதுவித்து அப்பிரதியை இன்று தங்கட்கு அனுப்பியுள்ளேன். தயைசெய்து அவற்றை ஒருமுறை பார்வையிட்டு இடம் விளங்குபவைகளைக் குறித்துக் காட்டு வதுடன் அம்மேற்கோள்களில் காணுந் திருத்தங்களையும் செய்து அனுப்புமாறு மிகவும் வேண்டுகின்றேன். தங்கட்கு உள்ள பல அரிய வேலைகட்கிடையே நான் சிரமங் கொடுக்க நேர்ந்தது பற்றி வியசனிக்கிறேன். பொறுத்தருள்க.

இங்ஙனம்

தங்கள் அன்பன்

பாண்டித்துரை

உ.வே.சாமிநாதையர் அவர்கட்குச் சென்னை அரசாங்கம் 'மஹாமகோபாத்யாயர்' என்னும் பட்டத்தினை வழங்கிய போது பெரிதும் மகிழ்ந்து உ.வே.சா. அவர்கட்கு மடல் எழுதிப் பாராட்டுகின்றார்.

"இவ்வாண்டில் நம் அரசாங்கத்தார் தங்கட்கு 'மஹாமஹோபாத்யாயர்' என்னும் பட்டம் அளித்திருத்தலைப் பத்திரிகை வாயிலாக அறிந்து பெரிதும் மகிழ்வடைந்தேன். இப்பட்டமேயன்றி இதற்கும் மேலான தொன்றுண்டாயின் அதற்கும் தாங்கள் உரியர் என்பதைத் தமிழ்நாடு முன்னரே தெரிந்துள்ள தாயினும், நம் அரசாங்கத்தாரும் தமிழைக் கௌரவிக்கத் தொடங்கிய இம்முதற்செய்கை தமிழக முழுதையும் மகிழ்வூட்டத்தக்க தென்பதில் ஐயமில்லை."

என்று அம்மடலில் அவர் எழுதியிருப்பது எண்ணத்தக்கதே (காண்க அவர் கையெழுத்தோடு கூடியமடலின் நிழற்படம்).

ஐயரவர்கள் பெற்ற பெருமையினை அவர் சார்ந்த தமிழ்பெற்றது எனப் பெருமகிழ்ச்சியோடு இம்மடலில் எழுதுகின்றார் வள்ளல் பாண்டித்துரைத் தேவர்.

புலவர்க்கு இப்புரவலர் எழுதிய கடிதங்கள் தமிழின் வரலாற்றுக் கருவூலங்களாகும். இக்கடிதங்களெல்லாம் போற்றிப்

பாதுகாக்கத்தக்கனவாம். இம்மடல்களாகப் புத்தகங்களைப் போற்றிய புரவலராகத் திகழ்ந்த வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இப்புத்தகங்களிலேயே இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

சித்திரத்தில் நீயிருப்பாய் சிந்தையுளே வீற்றிருப்பாய்
சிறப்பாய்ச் செய்த
புத்தகத்தில் நீயிருப்பாய் புலவர்கள் தம் பாவிலெல்லாம்
புகழாய் நிற்பாய்
பத்திரிகைதனில் இருப்பாய் தமிழ்ப் பாண்டித்துரை
பாரில் எங்கும்
நித்தியமாயிருக்கும் நினை நிலங்கடந்தானென்று உலகர்
நிகழ்த்தல் என்னே!

ஜி.சதாசிவம்பிள்ளை (நாகை நீலலோசனி இதழ்)

நாட்டுத்தொண்டு

மொழித்தொண்டே மூச்சாகக் கொண்டுழைத்து
மூதறிஞர் வழிநடந்து அறிவுபேணி
விழியற்றார் தமக்கெல்லாம் ஒளியேற்றி
வழிகாட்டி விளங்கும் போது
பழிபோக்கச் சிதம்பரப்பேர் பண்பாளன்
பாங்கியரை வணிகத்தால் முறியடிக்க
வழிகண்டான்; கலங்கொண்டான்; தலைமைக்காக
பொன்பாண்டித் துரைவந்து புகழேகொண்டார்!

புலவர்.திருமிகு சி.அரசப்பனார்

சங்க இலக்கியத்தில் வேங்கைப்புலி, வேழம், வேங்கைமரம்

பேரா.**கஸ்தூரி இராமசாமி,**
பயிரியல் துறை (ப.நி),
யாதவர் கல்லூரி, மதுரை,
கைபேசி: 9095412239

சென்ற இதழின் தொடர்ச்சி

குட்டிகளை ஈன்ற வெண்புலியின் பசியைப் போக்க, வலிய ஆண் புலி ஆண்யானையின் முகத்தைச் சிதையத் தாக்கிக் கொன்று இடிபோன்று முழக்கமிட்டது.

"வயப்புனிற்று இரும்பிணப் பசித்தென வயப்புலி
புகர்முகம் சிதையத் தாக்கி, களிறுஅட்டு
உரும்இசை உரறும்...."

நற்.383:3-5

களிற்றைக் கொன்ற புலியின் முழக்கம் பெரிய மலையின் பிளப்பிடமெங்கும் மோதி எதிரொலித்தது. அதனைக் கேட்ட பெண்கள் இடி இடிப்பதாக நினைத்துக் காயவைத்த தினையைக் கூட்டிக் குவித்தார்கள். இப்படியொரு பாடல் நற்றிணையில் இடம் பெற்றுள்ளது.

".... .... உயர்வரைப்
பெருங்கல் விடரகம் சிலம்ப, இரும்புலி
களிறுதொலைத்து உரறும் கடிஇடி மழைசெத்து,
செந்தினை உணங்கல் தொகுக்கும்"

நற்.344: 8-11

இவ்வாறு, மலைவாழ் பெண்களுக்கே வேறுபடுத்திப் பார்க்க முடியாத வகையில் புலிமுழக்கமும் இடியோசையும் ஒத்திருந்தன என்பதை அறிகிறோம்.

யானையின் அச்சம்

ஆண் யானையைக் கொன்ற புலி இடிபோல முழக்கமிட்டதால் மின்னலுடன் கூடிய மழையின்போது எழுகின்ற இடியோசைக்குப் பெண் யானை அஞ்சியது.

"பெருங்களிறு உழுவை தாக்கலின் இரும்பிடிக்
கருவிமா மழையின் அரவம் அஞ்சுபு"

நற்.144: 1-2

இதனால்தான் வள்ளுவர்,

"பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" *(599)*

என்று கூறியிருப்பாரோ!

புலியை வென்ற யானை

'புலியொடு பொருத புண்கூர் யானை' (நற்.65:1),
'மறங்கொள் இரும்புலித் தொல்முரண் தொலைத்த
முறஞ்செவி வாரணம்' (கலி.42: 1-2),
'வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணம்' (கலி.43:1),
'புலிப்பகை வென்ற புண்கூர் யானை' (அகநா.202:3)

என்று வரும் இலக்கியச் சான்றுகள் வேங்கையை வீழ்த்திய வேழம் பற்றியவை.

புலி வலிமையானதுதான்; ஆனால் காணுந்தோறும் பொலிவு பெற்றுத் தோன்றும் யானையைக் கண்டு அஞ்சி ஓடித் தப்பியது (நற்.217) அப்படித் தப்பி ஓடிய புலி மீண்டும் திரும்பி வரும் என்று யானை எதிர்பார்த்துக் காத்திருந்ததாம் (நற்.336)

"காண்தொறும் பொலியும் கதழ்வாய் வேழம்
இருங்கேழ் வயப்புலி வெரீஇ...."

நற்.217: 2-3

"உரவுச்சின வேழம் உறுபுலி பார்க்கும்
இரவு... ... ..."

நற்.336: 7-8

'வேங்கை அடுமுரண் தொலைத்த நெடுநல் யானை'

(அகநா.307:6-7)

"சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் கொல்லும் துன்அருஞ் சாரல்" *(குறுந்.88)*

புலி தன்னிடமிருந்து தப்பித்துப் போனாலும் அதனை விடாமல் துரத்திச் சென்று தாக்கி நிலம் கிழியக் குத்திக் கொன்றதாம் ஒரு யானை.

"மாசுஇல் வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய அருங்கேழ் வயப்புலி
மாநிலம் நெளியக் குத்தி, புகலொடு
காப்புஇல வைகும் தேக்குஅமல் சோலை"

அகநா.251: 15-18

யானையின் முழக்கம்

யானையைக் கொன்ற புலி இடிபோல் முழக்கமிட்டதாகச் சில வருணனைகளைப் (நற்.144, நற்.344, நற்.383) பார்த்தோம். ஆனால் புலியைக் குத்திக் கொன்று யானை இடிபோல முழக்கமிட்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன.

"இரும்புலி தொலைத்த பெருங்கை யானை
வெஞ்சின உருமின் உரறும்..."

நற்.353: 9-10

".... .... யானை
தண்கமழ் சிலம்பின் மரம்படத் தொலைச்சி
உறுபுலி உரறக் குத்தி விறல்கடிந்து"

அகநா.148: 3-5

குருதிபடிந்த மருப்பு

புலியோடு போரிட்டு வென்றதால் யானையின் மருப்பில் குருதி படிந்து காணப்பட்டதை, 'புலிபொரச் சிவந்த புலால்அம் செங்கோடு' (நற்.202) எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியுள்ளார். குருதிபடிந்த மருப்பையும் உவமைப் பொருளாக்கி இலக்கிய விருந்து படைத்துள்ளனர்.

சங்க இலக்கியங்களில் காந்தள் மலருக்கென்று தனிச்சிறப்பிடம் உண்டு. காந்தள் முகை, மலரும்போது இதழ்கள் வெண்மையாக இருக்கும். பின்னர் படிப்படியாகச் சிவந்த நிறத்திற்கு மாறும். இடைப்பட்ட காலத்தில் இதழ்களின் அடிப்பகுதி வெள்ளையாகவும் நுனி சிவந்தும் இருக்கும். இத்தகைய காந்தள் மலரைக்கண்ட புலவருக்கு, போரிட்டுப் புலியைக் கொன்ற யானையின் கொம்பு நுனியில் குருதி படிந்திருந்த காட்சி நினைவுக்கு வருகிறது.

"தொன்றுஉறை துப்பொடு முரண்மிகச் சினைஇக்
கொன்ற யானைக் கோடுகண் டன்ன
செம்புடைக் கொழுமுகை அவிழ்ந்த காந்தள்"

நற்.294: 5-7

சினங்கொண்ட தலைவியின் கண்களின் விழிவெண் படலத்தில் நுனிமட்டும் சிவந்து காணப்படுகின்றது. புலியின் முதுகில் குத்திய கொம்புகளின் சிவந்த நுனி போல அவை இருந்தன என்று தலைவன் வருணித்தான்.

"கொடுங்கேழ் இரும்புறம் நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப்பு ஏய்ப்ப, கடைமணி சிவந்தநின்
கண்... ... ." *நற்.39: 4-7*

பொதுவாக, 'காந்தள் மென்விரல்கள்' என்றும் குவளையங்கண்கள் என்றும் பாடுவது புலவர் வழக்கமாகும். ஆனால் குருதிக் கறையினால் நுனிசிவந்த மருப்புப் போன்று காந்தள் மலரிதழ்கள் இருந்தன என்பதும், தலைவியின் கடைக்கண் சிவந்திருந்தது என்பதும் நமக்கு வியப்பைத் தருகின்றன.

குருதிக் கறையைப் போக்கிய யானை

புலியைக் கொன்றதால் மருப்பில் ஏற்பட்ட குருதிக் கறையைப் போக்க வேண்டுமல்லவா? அதற்கு மழைநீர் துணை புரிந்ததாம்.

"தொன்றுபடு துப்பொடு முரண்மிகச் சினைஇக்
கொன்ற யானைச் செங்கோடு கழாஅ
அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி" *நற்.247:1-3*

"பொருதுஇகல் புலிபோழ்ந்த பூநுதல்எழில் யானைக்
குருதிக்கோட்டு அழிகறை தெளிபெறக் கழீஇயின்று" *நற்.20:4-5.*

புலியைக் கொன்றுவிட்டு அருவிக்குச் சென்று தனது மருப்பினைக் கழுவிக்கொள்ளுமாம் யானை.

"கொல்முரண் இரும்புலி அரும்புழைத் தாக்கிச்
செம்மறுக் கொண்ட வெண்கோடு யானை
கல்மிசை அருவியின் கழூஉம் சாரல்"

நற்.151:2-4

"இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவ கங்குல்
அருவி தந்த அணங்குடை நெடுங்கோடு"

அகநா.272:1-3

"உழுவையொடு உழந்த உயங்குநடை ஒருத்தல்
நெடுவகிர் விழுப்புண் கழாஅ கங்குல்

ஆழி அழிதுளி பொழிந்த வைகறை
வால்வெள் அருவிப் புனல்...." *அகநா.308: 1-4*

வேங்கைமரமும் வேங்கைப்புலியும்

வேங்கைமரத்தின் பயிரியற்பெயர் ட்ரோகர்ப்பஸ் மார்சுப்பியம் (Pterocarpus marsupium). இது பேபேசி (Fabaceae) எனப்படும் அவரைக் குடும்பத்தைச் சேர்ந்தது. மலைப்பக்கத்தில் வளரும் மரம். மேற்குத்தொடர்ச்சி மலைகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. கரியநிறத்தில் வலுவான அடிமரத்தைக் கொண்டது. அதனால்தான் புலவர்கள் 'கருங்கால் வேங்கை' எனக் குறிப்பிட்டுள்ளனர். இம்மரத்தினுடைய வைரம் பாய்ந்த கட்டைகள் வீட்டு மரப்பொருட்கள் செய்யவும் உழவுக் கருவிகள் செய்யவும் பயன்படுகின்றன. இம்மரத்திலிருந்து கிடைக்கும் செந்நிறப் பிசின் மருத்துவப் பண்புடையது.

வேங்கைமரம் தழைத்துக் கிளைத்து உயரமாக வளரும். செம்மஞ்சள் நிறத்தில் பூக்கள் கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கும். 'வேங்கை' எனும் சொல் வேங்கைமரத்தையும் புலியையும் குறிக்கும் பொதுச் சொல்லாகும். பெயரளவில் மட்டுமன்றி, கரும்பாறைகளினூடே பூத்துக்குலுங்கும் வேங்கைமரம் புலி போலவும் தோற்றமளிக்கும். அதனால்தான் 'புலிப்பொறி வேங்கைப் பொன் இணர்' (ஐங் 396) என ஓதலாந்தையாரும்,

'உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கை' (குறிஞ்சிக்கலி.2:6) எனக் கபிலரும் குறிப்பிட்டுள்ளனர்.

வேழமும் வேங்கை மரமும்

வேழம் இலை தழைகளை உண்ணும். மரங்களின் கிளைகளைத் தனது தும்பிக்கையால் வளைத்து முறித்து வாய்க்குள் திணித்து உண்ணும். இக் காட்சிகளை அடிக்கடி காணுகின்ற வாய்ப்பு புலவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இயற்கைச் சூழலில் வாழ்ந்த புலவர்களுக்கு இது அன்றாட நிகழ்வாக இருந்திருக்கும்.

யானைகளின் வாழ்விடங்களையும் வழித்தடங்களையும் அழித்துவிட்ட காரணத்தினால் அவை ஊருக்குள் வந்து விளைநிலங்களை அழிப்பதையும் வாழை, தென்னை மரங்களைச் சாய்த்து உண்ணுவதையும் தொலைக்காட்சிகளில் காண்கிறோம். அக்காட்சிகளிலிருந்து யானை எவ்வாறு மரங்களை முறித்து உண்கின்றது என்பதை அறியலாம்.

உணவுக்காக வேங்கை மரத்தை யானை முறிக்கின்ற காட்சிகளைப் புலவர்கள் பார்த்திருக்கின்றனர். 'வேங்கை எரிமருள் கவளம் மாந்தி' (அகம்.349) எனப் புலவர்கள் பாடியிருப்பதிலிருந்து யானை வேங்கை இலைகளையும் பூக்களையும் விரும்பி உண்ணும் என்ற செய்தி கிடைக்கிறது.

மேட்டு நிலத்தில் உள்ள வேங்கை மரத்தின் அடிப்பாகத்தை முறித்துப் பூக்களில் மொய்க்கும் தேனீக்களைப் பறந்தோடுமாறு செய்துவிட்டு இலைகளையும் பூக்களையும் பிடுங்கிக் கவளமாகத் தன் கன்றுக்கும் பெண்யானைக்கும் ஊட்டும் காட்சியைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் பாலை பாடிய பெருங்கடுங்கோ.

"வன்சுவல் பராரை முருக்கி கன்றொடு
மடப்பிடி தழீஇய தடக்கை வேழம்
தேன்செய் பெருங்கிளை இரிய வேங்கைப்
பொன்புரை கவளம் புறந்தருபு ஊட்டும்"

நற்.202:3-6

வேங்கைப்புலி, வேங்கைமரம், வேழம் – புலவர் கற்பனை

இதுகாறும் மூன்று வகையான குறிஞ்சிநிலக் காட்சிகளைச் சங்க இலக்கியங்களில் கண்டோம்.

1. வேங்கைக்கும் வேழத்திற்குமான பகை, சண்டை;

2. மலர்ந்துள்ள வேங்கைமரமும், பாறைகளின் மீது உதிர்ந்து கிடக்கும் வேங்கை மலர்களும் புலிபோலத் தோற்றமளித்தல்;

3. யானை தன் உணவிற்காக வேங்கைமரத்தை முறித்தல். இம் மூன்று காட்சிகளையும் பார்த்த புலவர்கள் தம் கற்பனை வளத்தை ஏற்றிச் சொற்சித்திரம் படைத்துள்ளனர். புலியுடன் கொண்ட பகையினால் யானை வேங்கைமரத்தைப் புலியென்று எண்ணித் தாக்குவதாகப் புனைந்துரைத்துள்ளனர்.

சுடர்வீ வேங்கை

மரங்கள் நிறைந்த காட்டில் வலிமைமிக்க ஒரு யானை சினங்கொண்டு, சுடர்போலப் பூத்து நிற்கும் வேங்கை மரத்தின் கிளையை வளைத்து இழுத்துப் பிளந்து தன் தலை மீது போட்டுக்கொண்டு ஒரு போர்வீரன் போலச் சென்றது. அக்காட்சியைக் கண்ட பரணர் தம் கற்பனையை ஏற்றிப் பாடியுள்ளார். கரும்பாறைகள் நிறைந்த மலையில் வேங்கை மரம் பூத்து நின்ற தோற்றம், யானைக்குப் புலி நிற்பது போலத்

தோன்றியது. அதனைக் கண்டு அஞ்சிய யானை அந்த மரத்தைக் குத்திச் சிதைத்தது. பின்னர் அதனை எடுத்துத் தன் தலை மீது போட்டுக் கொண்டது. அந்தக் காட்சி வேழத்திற்கும் வேங்கைக்குமுள்ள பரம்பரைப் பகையைக் காட்டுகின்றது.

"மறப்புலிக் குழுஉக்குரல் செத்து வயக்களிறு
வரைசேர்பு எழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப்பிளந்து, தன்
மாஇருஞ் சென்னி அணிபெற...."

பதிற்.41: 7-10

கபிலரின் சொல்லோவியங்கள்

வேங்கை மரத்தைக் குத்திச் சாய்க்க முயன்ற யானையின் கொம்பு மரத்தில் சிக்கிக்கொண்டது. மரமும் சாயவில்லை; கொம்பை வெளியேயும் எடுக்கமுடியவில்லை; அதனால் மலையே அதிரும்படி யானை பிளிறியது. அதனைக் கண்ட கபிலரின் சொற்சித்திரம் இதோ:

"உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண்டு அதன்முதல் குத்திய மதயானை
நீடுஇரு விடரகம் சிலம்பக் கூய்த்தன்
கோடு புய்க்கல்லாது உழக்கும்...."

குறிஞ்சிக்கலி. 2:6-9

இதேபோன்று மற்றொரு சொல்லோவியத்தையும் குறிஞ்சிக்கலியில் காணலாம். வேங்கையைத் தாக்கி வெற்றி பெற்ற ஒரு யானை சோர்வினால் அயர்ந்து தூங்கியது. உறங்கிய யானைக்குக் கனவிலும் அந்த வேங்கைப் புலியே வந்தது. சினந்தெழுந்து பார்க்க, அருகில் பூக்கள் நிறைந்த வேங்கைமரம் புலிபோலக் காட்சி அளித்தது. யானை உடனே அந்த மரத்தைச் சாய்த்து அழித்தது; சினந் தணிந்ததும் தான் அழித்தது புலியை அல்ல; வேங்கை மரத்தை என்பதை உணர்ந்து நாணம் கொண்டது; தலை கவிழ்ந்தபடியே சென்றது. இது யானைக்கும் வேங்கைக்கும் இடையே நிலவிய தீராத பகைமையைச் சொல்லுகின்ற நிகழ்ச்சியாகும்.

"கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை
நனவில்தான் செய்தது மனத்தது ஆகலின்

கனவிற் கண்டு கதும்என வெரீஇ
புதுவ தாக மலர்ந்த வேங்கையை
'அது' என உணர்ந்து அதன் அணிநலம் முருக்கிப்
பேணா முன்பின்தன் சினம்தணிந்து அம்மரம்
காணும்பொழுதில் நோக்கல் செல்லாது
நாணி இறைஞ்சும்.... ......"

குறிஞ்சிக்கலி. *13:1-9*

எதிரியைக் கண்டு சினம் கொண்டு தாக்குதல், பிழையாக நடந்து கொண்டதற்கு நாணுதல் ஆகிய பண்புகள் விலங்குகளுக்கு உண்டு. நடந்த நிகழ்வுகளின் மனப்பதிவுகளே உறங்கும்போது கனவுகளாக வரும் என்பது உளவியலாரின் கருத்து. இக்கருத்தையே கபிலரும் இங்குப் புலப்படுத்தியிருக்கின்றார். விலங்குகளுக்கும் கனவு வருமா? என்பது ஆராய்ச்சிக்குரியது.

ஒரு யானையைக் கண்டு அஞ்சிப் புலி ஓடிவிட்டமையால் அந்த யானை அருகிலிருந்த வேங்கை மரத்தை முறித்துத் தள்ளித் தன் சினத்தைத் தணித்துக்கொண்டது என்றும் கபிலர் பாடியுள்ளார்.

"..... .... வேழம்
இருங்கேழ் வயப்புலி வெரீஇ அயலது
கருங்கால் வேங்கை ஊறுபட மறலி
பெருஞ்சினம் தணியும் ...." *நற்.217: 2-5*

மலையின் மீதுள்ள வேங்கை மரத்தில் மலர்கள் புலியின் உடலில் உள்ள புள்ளிகளைப் போல் தோன்றுவதால் பெண்யானை அஞ்சி ஓடியதாக ஓர் அகநானூற்றுப் பாடல் இயம்புகின்றது.

"ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலின் கயவாய்
இரும்பிடி இரியும் சோலை" *அகநா.228:10-12*

உதிர்ந்த வேங்கை மலர்களும் யானையும்

மரத்திலிருக்கும் போது மட்டுமல்ல; கரும்பாறைகளின் மீதும் கூரை மீதும் வேங்கை மலர்கள் உதிர்ந்து கிடக்கின்ற காட்சிகளும் புலிபோலத் தோற்றமளித்தன என்று பாடியுள்ளனர். சிறுமியரின் அழுகையை நிறுத்த அன்னையர் 'புலிபுலி' என வேங்கைமலர்கள் கிடக்கின்ற கல்லைக் காட்டுவார்களாம்.

"மெல்இணர் வேங்கை வியல்அறைத் தாயின
அழுகை மகளிர்க்கு உழுவை செப்ப" *பரி.14:11-12*

கரிய பாறை மீது வேங்கைமலர்கள் உதிர்ந்து கிடக்கின்ற காட்சி புலிக்குட்டி கிடப்பதுபோலத் தோன்றியது எனக் குறுந்தொகைப் பாடலொன்று கூறுகிறது.

"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றுங் காடு" *குறுந்.47:1-2*

இதேபோன்று வேங்கைமலர்கள் பாறைமீது உதிர்ந்து கிடக்க, அக்கல் புலி போலத் தோற்றமளித்தது எனக் கபிலர் பாடியுள்ளார்.

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறம் கடுக்கும்" *புறநா.202:18-20*

மற்றுமொரு பாடலில், கபிலர் புலிபோலத் தோன்றிய வேங்கை மலர்கள் யானையை அச்சுறுத்தியது என்று பாடியுள்ளார். குறவர்களின் குடிசைகளின் மீது கிடந்த வேங்கை மலர்களைக் கண்டு அஞ்சிய யானை மூங்கிற் காட்டுக்குள் ஓட அங்கிருந்து மூங்கில்களெல்லாம் முறிந்து விழுந்தனவாம்.

"குறவர் ஊன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பில் கழைபட, பெயரும்" *அகநா.12:9-12*

இக்கற்பனைப் புனைவுகளிலும் ஒரு நுட்பம் இருக்கிறது. வேங்கை மரத்தைப் புலியென நினைத்துத் தாக்கியதாகப் பாடிய கபிலர், புலிபோலத் தோன்றிய பாறையைத் தாக்கியதாகப் பாடவில்லை.

மேற்கண்ட பாடல்களில் உதிர்ந்த வேங்கை மலர்கள் புலிபோலத் தோற்றமளித்ததாகப் புலவர்கள் பாடியுள்ளனர். யானையுடன் போரிட்டு இறந்துகிடந்த புலி, காற்றால் ஒடிந்து வீழ்ந்து கிடந்த பூக்களையுடைய வேங்கைமரத்தின் கிளை போல இருந்தது எனக் குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

".... .... நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை

வெண்கோடு செம்மறுக் கொளீஇ விடர்முகைக்
கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்..” *குறுந்.343:1-6*

நிறைவாக....

இவ்வாறு வேங்கைப்புலியும் வேழமும் வேங்கைப் பூவுடைய மரமும் புலவர்களின் கற்பனைக்கு விருந்தாக அமைந்தன. அதே சமயம் வேங்கைப் புலியும் வேழமும் தீராத பகைமை கொண்ட விலங்குகள் என்ற உண்மையை அவர்கள் புலப்படுத்தியுள்ளனர். பூத்திருக்கும் வேங்கைமரமும், கூரைமீது விழுந்து கிடக்கும் வேங்கைப் பூக்களும் கூட யானைக்குச் சினத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தின என்பது வியப்பூட்டும் கற்பனையாகும். விலங்குகள் கனவு காணும் என்று சொல்லியிருப்பது கற்பனையா? உண்மையா? என்பதை மேலாராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். விலங்குகள் தாம் செய்த தவறுக்காக நாணங் கொள்ளும் என்னும் உண்மையை அவற்றோடு பழகும் அன்பர்களுக்கு நன்றாகத் தெரியும். தொலைக்காட்சிகளில் நாம் இன்று காணும் விலங்கு உலகம் கூட இன்னும் இந்த அளவுக்கு நுட்பமாகக் காட்சிகளை உணர்த்தவில்லை. அவ்வகையில் பழந்தமிழ்ப் புலவர்களின் கூர்ந்தநோக்கும் விலங்கு நூலறிவும் நமக்கு இன்னும் புதுமையாகத் தோன்றுகின்றன.

பன்னூற்றிரட்டு

தமிழ்நூலில் உள்ளபல கருத்துவளம்
ஒன்றாக்கித் தொகுத்து நல்ல
தமிழாகப் பிறர்புகழத் திரட்டியவர்
நம்தேவர் புலவர் போற்ற
தமிழ்த்திரட்டால் பேச்சாளர் எழுத்தாளர்
மிகப்பெரிய அறிஞராய் விளங்குகின்றார்!
தமிழ்த்தொண்டர் தொண்டுக்கு ஈடுஇணை
இனி உண்டோ தரணி மேலே

புலவர்.திருமிகு சி.அரசப்பனார்

சைவசித்தாந்தமும் திருமந்திரமும்

- முனைவர் **உ.கருப்பத்தேவன்,**
உதவிப்பேராசிரியர் - தலைவர் (பொ),
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

சென்ற இதழின் தொடர்ச்சி

உள்ளம் பெருங்கோயில் 'பதி'யின் இயல்பு

ஆலயங்களாகிய கோயில்களில் மிகச் சிறந்தது மனித உடலாகும். மனித உயிரின் இருப்பிடம் உடலேயாகும். உடலைக் கொண்டே மனித உயிரை அறிய இயலும். இருப்பிடத்தின் வாயிலாகவே உயிரின் உயர்வு புலப்படுகின்றது. உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாகவும் ஆதாரமாகவும் இருப்பது எதுவோ அதுவே கடவுள்; பதி (ந.சுப்புரெட்டியார், சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், ப.389) என்பர். ஆதலின் அது 'உயிருக்கு உயிர்' என்று கூறுப்படுகின்றது. 'பதி'யாகிய இறைவனே மனிதன் உள்ளிட்ட உயிர்களின் பேரறிவிற்கும் அன்புக்கும் ஆற்றலுக்கும் உறைவிடம் ஆவான். பதியாகிய அவ்விறைவனே காணுமிடம் எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றான். இறைவனின் முழுமையான காட்சி வெளிப்படும்போது மனித வாழ்க்கையின் இரகசியங்கள் அனைத்தும் எளிமையாகத் தெளிவாகிவிடும்.

மனிதனின் சிற்றுடலின் வாயிலாகச் சிற்றுயிர் ஒளிர்கின்றது. பேருடலாகிய இயற்கை முழுவதும் இறைவன் ஒளிர்கின்றான். இயற்கைக்கு அப்பாலும் இறைவன் இருக்கின்றான். ஆதிஅந்தம் காட்டாத முழுமுதலாகிய இறைவன், அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளியாய் நிலவுகின்றான். இறைவனை அறிவதற்கு இயற்கையாகிய பிரகிருதியே உற்ற வழியாகும். எல்லையில் அடங்காமல் பிரமாண்டாமாயிருக்கும் பிரகிருதியின் அணுப்போன்ற ஒருசிறு பகுதியே மனித உடலாகும். பிரமாண்டத்தின் பெருமை அனைத்தும் சிறுபிண்டமாகிய நமது உடலில் உள்ளது. 'அண்டத்தைப் போலவே பிண்டமும்' என்னும் பழமொழியும் சிந்திக்கத் தக்கதே. நமது உடலையும் அதில் ஒளிர்பவனையும் உள்ளபடி அறிந்துகொண்டால் அகிலாண்ட கோடி பிரமாண்டமான நாயகனையும் தெரிந்து கொள்ளலாம். திருக்கோயில்களில் இறைவனைத் தொழும்போது ஆலயங்கள் அனைத்திலும் சாலச்சிறந்தவன் நம்

உடலிலும் உலகெங்கிலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற இறைவன் நம் உள்ளத்தில் சிறப்பாக இயங்குவதை அறியலாம். இதனை,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானாற்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

(திருமந்திரம், ஏழாம் தந்திரம், சிவபூசை, பா.எண்.1)

என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம். இப்பாடல் ஆழமான பொருளை உள்ளடக்கியதாகும். சைவச் சான்றோர் அனைவருமே மானுட உடல் தேவாலயங்களுள் சிறந்ததென்றே வலியுறுத்திப் பாடியுள்ளனர். தாயுமானவர் தன்னுடைய பராபரக் கண்ணியில்,

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்; அன்பே
மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே"

(தாயுமானவர் பாடல்கள், பராபரக்கண்ணி, பா.எண்.15)

என வலியுறுத்துவதும், திருநாவுக்கரசர் தன்னுடைய தேவாரப் பாடலொன்றில்,

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலால் நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றஇக் காட்டினோமே"

(அப்பர் தேவாரம், ப.76:4)

என அருள்வதும் மனங்கொள்ளத்தக்கதாகும். அரசர்க்கெல்லாம் அரசனாகிய ஆண்டவன் வாழும் இடம் மனித உடம்பு. ஆதலால் உடம்பைத் தூய்மையாகப் பேணுதல் வேண்டும். இறைவன் அருளாலேயே உடம்பிற்கு மகத்துவமும் பெருமையும் கிடைக்கும். இறைவனை உணர்ந்து வணங்குதல் வேண்டும். 'பூசை' என்பதற்கு நன்மையில் விருப்பம் எனப் பொருள் கொள்ளலாம். அச்சத்தைத் தவிர்த்தலும் அடிபணிதலுமே பூசையின் இல்க்கு ஆகும்.

பயன்பட்ட நூல்கள்

1. ஞா.மாணிக்கவாசகன் (உரை.ஆ.), திருமூலர் திருமந்திரம் மூலமும் விளக்க உரையும், உமா பதிப்பகம், சென்னை, 2009.
2. ப.அருணாசலம், திருமந்திரக் கோட்பாடு, முல்லை நிலையம், சென்னை, 2002.
3. ந.சுப்புரெட்டியார், சைவமும் தமிழும், கழக வெளியீடு, சென்னை, 2001.
4. ந.சுப்புரெட்டியார், சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், கழக வெளியீடு, சென்னை, 2004.
5. இராமாநுசாச்சாரி, ர. & கொ.நா.சீநிவாசன், சைவசித்தாந்தம், திருச்சி, 1963.
6. திருமூலர், திருமந்திரம், திருப்பனந்தாள் வெளியீடு, 1976.
7. சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்தத் தெளிவியல், தருமையாதீன வெளியீடு, மயிலாடுதுறை, 1968.
8. மாணிக்கவாசகர், திருவாசகம், தருமையாதீன வெளியீடு, மயிலாடுதுறை, 1949.
9. மெய்கண்டார் முதலியோர், மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, இரண்டு பகுதிகள், கழக வெளியீடு, சென்னை, 1969.
10. மறைஞான சம்பந்தம், பதிபசு பாசத்தொகை, தருமையாதீன வெளியீடு, மயிலாடுதுறை, 1940.
11. சி.கலியபெருமாள், திருமுறைகளின் தனிச்சிறப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.
12. சி.இராம.நாகப்பச்செட்டியார், சைவசித்தாந்தம் (இரத்தின விளக்கம்), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2007.
13. க.வச்சிரவேல் முதலியார், சைவசித்தாந்தத் திறவு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1980.
14. மறைமலையடிகள், சைவசித்தாந்த ஞானபோதம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.
15. மா.இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2011.

வருந்துகிறோம்

பேராசிரியர் **அ.அ.மணவாளன்** 30.11.2018 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம். அப்பெரியார் சென்னை நகரில் வசித்த பெரும்புகழ் மிக்க தமிழறிஞர். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு பலசமயங்களில் ஒல்லும் வகையில் உதவி வந்தார். செந்தமிழ் இதழின் மதிப்புறு ஆசிரியர் குழுவில் தொடர்ந்து பணியாற்றினார்கள். தமிழ்ச்சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு மலர் சிறப்புற வருவதற்கு இதழாசிரியருக்கு பல வகையிலும் உதவியாக இருந்து வந்தார்கள்.

அவர்கள் ஆங்கிலம் தமிழ் இருமொழியிலும் புலமை பெற்ற அறிஞர்; இந்திய மொழிகள் பலவற்றை அறிந்தவர்; உலகமெங்கும் வழங்குகின்ற இராமாயணக்கதைகளைத் தொகுத்து ஆய்வு செய்து கம்பனின் படைப்பு மிகச் சிறப்பாக அமைந்திருப்பதை நூல் வடிவில் கொண்டு வந்து கம்பனின் படைப்பாற்றலை உலகறியச் செய்த பெருமக்களுள் ஒருவர். ஆங்கிலத்தில் வெளிவந்த திருக்குறள் உரைகளைச் சீர்தூக்கித் திறனாய்வு செய்துள்ளார். அவருடைய துணைவியார் "வாழ்க்கைத்துணை நலம்" என்னும் பெருமிதம் உடைய கல்வியாளர்; வழிவழி கல்வி சார்ந்த குடிப்பிறந்த பெருமையுடையவர்; பேராசிரியர் அ.அ.மணவாளனுடைய வளர்ச்சிக்கு உற்ற துணையாகவும் தூண்டுதலாகவும் விளங்கினர். அப்பெருமாட்டிக்கும் மக்களுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இரங்கற்பா

"விரோதி கிருதே விருச்சிகமே யுங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா - குரோதத்தாற்
றம்மிற் கடையாஞ் சனியு மிரேவதியு
மும்மிற் கலந்துற் றதோ"

சங்கச்செய்திகள்

நான்காம் தமிழ்ச்சங்கத்தில் முகவை மன்னர் பாசுகர சேதுபதி அவர்கள் 151ஆம் பிறந்தநாள் விழா, புதிய அறக்கட்டளைகள் தொடக்கவிழா, தொல்காப்பிய நூல்கள் வெளியீட்டு விழா என்ற முப்பெரும் விழா (03.11.2018) அன்று செந்தமிழ்க் கல்லூரி வைர விழா அரங்கில் நடைபெற்றது.

செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் இராணி.லெட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். நான்காம் தமிழ்ச்சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார்.

முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் இயற்றிய தொல்காப்பிய நூல்களை வெளியீட்டு சென்னை **AMET** பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் க.திருவாசகம் அவர்கள் சிறப்புரை வழங்கினார். அவர் தனது சிறப்புரையில் "எனது துணைவேந்தர் பணிக் காலத்தில் கலைஞர் எழுதிய தொல்காப்பியப் பூங்கா நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தேன். சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தராக நான் பதவி வகித்தபோது "சேப்பாக்க வளாகம்" என்று அழைக்கப்பட்டதை "தொல்காப்பியர் வளாகம்" என பெயர் மாற்றம் செய்தேன். **F50** என்று பெயரிடப்பட்ட அரங்கிற்கு தந்தை பெரியார் அரங்கம் என பெயர் மாற்றம் செய்தேன். அந்தத் தகுதியே நான்காம் தமிழ்ச்சங்கம் வெளியிடும் தொல்காப்பியம் குறித்த நூல்களை வெளியிடும் பெருமையை எனக்குக் கொடுத்தது என்றும், 3000 ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கண நூலான தொல்காப்பியத்தை இன்றைய இளைய தலைமுறையினரும், எதிர்கால சந்ததியினரும் புரிந்து கொள்ளும் வண்ணம் தெளிவுரைகள் தரப்பட வேண்டும் என்றும் அப்பொழுதுதான் நம் மொழியைக் காப்பாற்ற இயலும்" எனவும் குறிப்பிட்டார்.

திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி தமிழ்த்துறை மேனாள் தலைவர் முனைவர் திரு.கு.திருமாறன் அவர்களும், வெங்கடசாமி நாட்டார் கல்லூரி பேராசிரியர் (பணிநிறைவு) முனைவர் தமிழழகன் அவர்களும் நூல் மதிப்புரை வழங்கினார்கள். முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் ஏற்புரை நல்கினார், முன்னதாக செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்(பொ.) கி.வேணுகா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். துணை முதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றி கூறினார். விழாவில் நான்காம் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரிக்குழு உறுப்பினர்கள், மேனாள், இந்நாள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

சனவரி திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

சி.வை.தாமோதரம் பிள்ளை (சன.1)

தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் (சன.2)

பிரமிள் (சன.6)

வெ.சாமிநாத சர்மா (சன.7)

அரசஞ் சண்முகனார் (சன.11)

தேவநேயப் பாவாணர் (சன.15)

ஆனந்தரங்கம் பிள்ளை (சன.16)

கரிச்சான் குஞ்சு (சன.17)

சாமி சிதம்பரனார் (சன.17)

ம.ப.பெரியசாமித் தூரன் (சன.20)

இராமலிங்க அடிகள் (சன.30)

அகிலன் (சன.31)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும், கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ்பாடம் மாதிரி தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

நடப்பாண்டு முதல் மாநில பாடத்திட்டத்தில் கூடுதலாக பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரி தேர்வு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்கு சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்க தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 19.01.2019-ஆம் நாளன்றும், பதினொன்றாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1